மொழியின் கதை

மு. வரதராசன்

மொழியின் கதை

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை - 1

அணா 10

முதல் பதிப்பு : ஏப்ரல் 1955

உரிமை ஆசிரியர்க்கு

ஆசிரியரின்

மற்ற நூல்கள் :

கள்ளோ? காவியமோ?
பெற்ற மனம்
விடுதலையா?
செந்தாமரை
பாவை
மணச்சான்று
காதல் எங்கே?
மலர்விழி
அந்த நாள்
கரித்துண்டு
அல்லி
கி. பி. 2000
கவிஞர் தாகூர்
அறிஞர் பெர்னர்ட் ஷா
காந்தி அண்ணல்
பச்சையப்பர்
இளங்கோ
கண்ணகி
மாதவி
அன்னைக்கு
தங்கைக்கு
தம்பிக்கு
நண்பர்க்கு
குழந்தை
எழுத்தின் கதை
சொல்லின் கதை
மொழி நூல்
மொழி வரலாறு
மொழியியற் கட்டுரைகள்
அரசியல் அலைகள்
மணல் வீடு
முல்லைத்திணை
ஓவச் செய்தி
கொங்குதேர் வாழ்க்கை
குறுந்தொகை விருந்து
நற்றிணை விருந்து
நெடுந்தொகை விருந்து
நெடுந்தொகைச் செல்வம்
குறுந்தொகைச் செல்வம்
தமிழ் நெஞ்சம்
இலக்கிய ஆராய்ச்சி
அறமும் அரசியலும்
திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

குறிப்பு

உலகத்தில் மொழி இல்லையானால் நாகரிகம் என்பதே வளர்ந்திருக்காது. ஆகையால் நாகரிகக் கருவிகளுள் முதன்மையானது மொழியே. மற்ற நாகரிகக் கருவிகளின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தது, இருந்துவருவது மொழியே. இப்படிப்பட்ட மொழி எப்படித் தோன்றியது, எப்படி வளர்ந்து உருவாகியது என்பவற்றை எளிய முறையில் கதை சொல்வதுபோல் தெரிவிப்பது இந்தச் சிறு நூல்.

மு. வ.

1. மொழி இல்லாத நிலை
2. மொழியின் தொடக்கம்
3. எழுதா இலக்கியம்
4. எழுத்தின் தொடக்கம்
5. அருமையான கலை

1. மொழி இல்லாத நிலை

ஒருவனைப் பார்த்து நாகரிகமானவன் என்று சொல்கிறோம். அவன் உடுத்திருக்கும் உடையைப் பார்த்து நாகரிகம் என்று சொல்வதா? அல்லது, அவன் வாழும் வீட்டைப் பார்த்து நாகரிகம் என்று சொல்வதா? நாகரிகத்துக்கு இவைகளும் காரணம் தான். ஆனால், முக்கியமான காரணம் ஒன்று உண்டு. அது எது என்றால், அதுதான் அவன் பேசும் மொழி.

உடை, வீடு, மொழி முதலான எல்லாம் நாகரிகத்துக்கு வேண்டியவைகளே. அவற்றில் மிக முக்கியமானது மனிதன் பேசும் மொழிதான். மொழி இல்லாவிட்டால் ஒருவன் எப்படிப் பேச முடியும்? ஒருவன் பெற்றோருடன் எப்படிப் பழக முடியும்? பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளோடு எப்படிப் பழக முடியும்? நண்பர்களோடு எப்படிப் பேச முடியும்? ஆகையால், மொழி இல்லையானால், வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் எவ்வளவோ குறை ஏற்படும். ஒருவன் வாழ்க்கைக்கு மட்டும் அல்ல, அரசாங்க அமைப்புக்கும் மொழிதான் அடிப்படையாக இருக்கிறது.

ஒவ்வொரு நாளில் இரவில் கனவு காணும்போது வாயில் ஏதாவது சொல்லிக்கொண்டே தூங்குகிறோம். நமக்கு அப்போது ஒன்றும் தெரியாவிட்டாலும், மற்றவர்கள் அதைக் கேட்டுக்கொண்

டிருக்கிறார்கள். பொழுது விடிந்த பிறகு நம்மைப் பார்த்து, "ஏனப்பா! நீ என்ன கனவு கண்டாய்? இரவெல்லாம் வண்டி என்று வாய் பிதற்றினாயே! யாரோ பழனியைத் திரும்பத் திரும்பக் கூப்பிட்டாயே!" என்று கேட்கிறார்கள். அப்போதுதான் நமக்கு அது தெரிகிறது. "இல்லை! பழனி என்று பள்ளிக்கூடத்தில் ஒரு நண்பன் இருக்கிறான். அவன் கனவில் வந்தான்" என்று நீ சொல்வாய். இதிலிருந்து என்ன தெரிகிறது? நம்முடைய வாழ்க்கையில் மொழி எவ்வளவு வேரூன்றிவிட்டிருக்கிறது என்பது தெரிகிறது. நம்மை மறந்து தூங்கும் போதும் விட முடியாத பழக்கமாக மொழி ஊறிப் போயிருக்கிறது. குழந்தையாக இருக்கும்போது மனிதன் முதலில் கற்றுக்கொள்வதும் மொழிதான். தள்ளாத கிழவனான பிறகு மறக்காமலிருப்பதும் மொழிதான்.

இவ்வளவு சிறப்பான மொழி மிகப் பழங் காலத்தில் இல்லாமலிருந்தது என்று சொன்னால் நம்மால் நம்பமுடியவில்லை. நம்பினாலும் நம்பா விட்டாலும், மொழி இல்லாத காலம் ஒன்று இருந்தது என்பது உண்மைதான். அந்தக் காலம் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்ப்பது அருமையாக இருக்கிறது. அந்தக் காலத்தில் ஒருவனுக்குத் தாகம் எடுத்தால், "குடிக்கத் தண்ணீர் வேண்டும்" என்று மூன்று சொற்கள் சொல்ல முடியாது. சொற்கள் இல்லாத காலம் அது. அப்போது மனிதன் என்ன செய்திருப்பான்? ஊமை போல் கைகளாலும் முகத்தாலும் சைகை காட்டித் தண்ணீர் கேட்டிருப்பான். நாக்கை நீட்டி, முகத்தை

வாட்டத்தோடு காட்டி, கையை வளைத்துக் கட்டை விரலை வளைத்து, வாயருகே வைத்துக் காட்டியிருப்பான். பிறகு கையை நீட்டிக் கெஞ்சுவதுபோல் காட்டியிருப்பான். இவ்வளவு சைகை செய்தாலும், கேட்டவர்கள் அவனுடைய கருத்தையும் தேவையையும் எளிதில் தெரிந்துகொள்ள முடியாது. தெரிந்துகொண்டிருந்தால் அது அவனுடைய நல்ல காலம் என்று சொல்ல வேண்டும். இதுதான் மொழி தோன்றுவதற்குமுன் இருந்த நிலைமை.

இன்னொன்று எண்ணிப்பார்க்கலாம். இன்று இரவு எட்டுமணிக்குப் படித்துக்கொண்டிருக்கும் போது, திடீரென்று மின்சார விளக்கு அணைந்து விடுவதாக எண்ணிக்கொள்வோம். அப்போது எங்கும் ஓரே இருட்டாக இருக்கும். ஆனாலும் தங்கையுடன் அண்ணனுடன் பேசமுடியும் அல்லவா? "மெழுகுவர்த்தி கொண்டுவா" என்று சொல்ல முடியும் அல்லவா? ஆனால் ஊமைப்பையன் ஒருவன் அப்போது நம் பக்கத்தில் உட்கார்ந்து கொண் டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த ஊமைக்கு நாம் ஏதாவது தெரிவிக்க முடியுமா? பகலில் கையால் சைகை செய்தால் அவன் தெரிந்து கொள்வான். இரவிலும் விளக்கு வெளிச்சத்தில் தெரிந்துகொள்வான். ஆனால் விளக்கு அணைந்த பிறகு இருட்டில் அவனுக்குச் சைகை காட்ட முடியுமா? நம் கைகளை ஊமை எப்படிப் பார்க்க முடியும்? எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?

ஊமைக்குக் கண் இருந்தும் பயன் இல்லை. காதால் ஒலி கேட்க முடியாத காரணத்தால், இருட்டில் நம் முயற்சி பலிக்காது. பழங்காலத்தில் வீடு

கட்டத் தெரியாமல் ஆடை நெய்து உடுக்கத் தெரியாமல் வாழ்ந்த பழைய மனிதர்களும் இப்படித்தான் தடுமாறினார்கள். அவர்களுக்கு ஒலி கேட்கும் காது இருந்தும், ஊமைகள்போல் வாழ்ந் தார்கள். மொழி இல்லாத குறையால் எவ்வளவோ இடர்ப்பட்டார்கள்.

தென் ஆப்ரிக்காவில் நாகரிகம் இல்லாத மனிதர் கள் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்துவந்தார்கள். அவர்களுக்குப் புதர்மக்கள் என்று பெயர். அவர்கள் இரவில் பேசும்படியாக ஏற்பட்டால், தீ வளர்த்து அதன் வெளிச்சத்தில்தான் பேசுவார்களாம். வெளிச்சம் இல்லாவிட்டால் அவர்களால் பேச முடியாதாம். இதற்குக் காரணம் என்ன? அவர் களின் மொழியில் போதுமான அளவுக்குச் சொற் கள் வளரவில்லை. அந்த மொழி அரைகுறையான மொழி. ஆகவே சைகை பாதியும் சொற்கள் பாதியு மாகக் கலந்து பேச வேண்டிய நிலைமை இருந்தது. சைகை இராக்காலத்தில் கண்ணுக்குத் தெரிய வேண்டும் அல்லவா? அதற்காக வெளிச்சம் வேண்டியதாக இருந்தது. சொற்கள் போதுமான அளவுக்கு இல்லாதபோது இவ்வளவு குறை என் றால், சொற்களே இல்லாத மிகப் பழங்காலத்தில் மனிதர் எப்படி இருந்திருப்பார்கள் என்று எண் ணிப் பார்க்கலாம்.

பழங்காலத்து மனிதன் இரவில் இருண்ட இடத்தில் சைகை காட்டி மற்றொருவனுக்குத் தன் கருத்தைத் தெரிவிக்க முடியாதபோது, திண்டாடி னான். அப்போது குரல்ஒலியைப் பயன்படுத்தக்

கற்றுக்கொண்டான். ஒலியைக் கேட்டு அறிவதற்கு வெளிச்சம் வேண்டாம் அல்லவா ?

மற்றென்று : இரவில் மட்டும் அல்ல. பகலிலும் சில வேளைகளில் குரல்ஒலியைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. கையால் செய்யும் ஊமைச் சைகைகள் பக்கத்தில் இருப்பவர்க்கும் எதிரில் இருப்பவர்க்கும் மட்டுமே தெரியும். தொலைவில் இருப்பவர்க்குத் தெரியாது. அப்போது கையால் சைகை செய்து பயனில்லை. அந்த நெருக்கடியில்தான் மனிதனுக்குக் குரல்ஒலி பயன்பட்டது.

மூன்ருவதாக மற்றொரு காரணமும் சொல்ல வேண்டும். பழங்காலத்து மனிதன் கைக்கு ஒரு வேலையும் இல்லாதபோது சைகை செய்ய முடிந்திருக்கும். ஆனல் இரண்டு கைகளிலும் பொருள்கள் இருந்தபோது, அல்லது இரண்டு கைகளுக்கும் வேலை இருந்தபோது அவன் எப்படிச் சைகை காட்டிக் கருத்தைத் தெரிவிக்க முடியும் ? அப்போதும் அவனுக்கு உதவியாக இருந்தது குரல்ஒலியே. எந்த நிலையில் இருந்தாலும், என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், குரலுக்குத் தடை இல்லை. பேசிக்கொண்டே மண் வெட்டலாம், மரம் வெட்டலாம், தண்ணீர் மொள்ளலாம், பேசிக்கொண்டே நடந்து போகலாம், பந்து விளையாடலாம். ஆகையால் எந்த வேலைக்கும் எந்த நிலைக்கும் இடையூறு இல்லாத வகையில் குரல்ஒலி அமைந்திருப்பதை மனிதன் உணர்ந்தான் ; உணர்ந்து, அதைப் பேசும் கருவியாகப் பற்றிக்கொண்டான். நாளடைவில் மொழி வளர வளர, அது எவ்வளவு அருமையான கருவி

என்பதை அறிந்தான்; மேன்மேலும் அதைப் போற்றத் தொடங்கினான்.

பசி எடுத்தால் ஒரு சிறுவன் என்ன செய்கிறான்? தாயிடம் போய், "அம்மா! பசி" என்று இரண்டு சொல் சொல்கிறான். உடனே அம்மா தெரிந்து கொள்கிறாள். ஆனால் இரண்டு வயது உள்ள குழந்தை என்ன செய்கிறது? அது தன் தாயிடம் போய், கொச்சை மழலைமொழியில் "சோச்சி, சோச்சி" என்று சில முறை சொல்கிறது. முகத்தைச் சுருக்கிக் கைகால்களை ஆட்டித் தாயின் மடிமேல் விழுந்து, மெலிந்த குரலில் அழுது கேட்கிறது. இதுதான் அரைகுறையாகச் சொற்கள் வளரத் தொடங்கிய நிலை. ஆறுமாதக் குழந்தை என்ன செய்கிறது? அது ஒரு சொல்லும் பேசத் தெரியாமல் அழுகிறது. அதற்குக் குரல்ஒலி இருக்கிறது. அந்தக் குரல்ஒலியைப் பயன்படுத்திக்கொண்டு அழுகிறது. கைகால்களை ஆட்டி முகத்தைச் சுருக்கிக்கொண்டு அழுகிறது. அதைப் பார்த்து, குழந்தைக்குப் பசி என்று தாய் தெரிந்துகொள்கிறாள். சொற்கள் இல்லாத பழங்கால நிலையும் இப்படித்தான் இருந்தது. அந்தக் காலத்து மனிதர்களுக்குக் கையால் சைகை காட்டத் தெரியும்; முகக் குறிப்புத் தெரியும்; சில ஒலிகளை ஒலிக்கவும் தெரியும்; ஆனால் சொற்களால் பேசத் தெரியாது.

பழங்காலத்து மனிதன் தன் உணர்ச்சியால் சில ஒலிகளை இயற்கையாகவே ஒலித்தான். இப்போதும் அப்படிப்பட்ட ஒலிகள் இருக்கின்றன. சீசீ, தூதூ, ஓஓ முதலான ஒலிகளை நாம் ஒலிக்கிறோம் அல்

லவா ? இவைகளை உணர்ச்சிஒலிகள் என்று சொல்வார்கள்.

அந்தக் காலத்தில் மனிதன் மிருகங்களுக்கு இடையில் வாழ்க்கையை நடத்திவந்தான். அவன் ஓநாய்க் கூட்டம் இருப்பதைப் பார்த்ததும் அதை மற்றவர்களுக்கு எப்படித் தெரிவித்தான் ? தொலைவில் இருந்தவர்களுக்குக் கேட்கும்படியாக ஓநாய் போலவே கத்தினான். அவன் கத்துவதைக் கேட்டவர்கள் ஓநாய்க் கூட்டம் வந்திருப்பதாகத் தெரிந்து கொண்டு ஓடி வந்தார்கள். இதுவும் சொற்கள் இல்லாத காலத்தில் மனிதன் ஒலியைப் பயன்படுத்திய முறையாகும்.

இந்த வழக்கம் இன்னும் போகவில்லை. நாம் குழந்தையிடம் பூனை என்று தெரிவிப்பதற்காக என்ன செய்கிறோம் ? பூனை பூனை என்று அதன் பெயரைச் சொல்வதில்லை, மியா மியா என்று பூனை கத்துவது போலவே ஒலிக்கிறோம். மியா என்று சொன்னவுடன் பூனை என்று குழந்தை தெரிந்து கொள்கிறது. எவ்வளவு எளிமையான வித்தை ! காக்கை என்ற சொல்லும் இப்படி ஏற்பட்டது தான். அது கா கா கா என்று கரைகிறது. அதனால் காக்கா என்று அதற்குப் பெயர் ஏற்பட்டது. குழந்தையின் கையில் உள்ள விளையாட்டுப் பொருள் கிலு கிலு கிலு என்று ஒலி செய்கிறது. அதனால் அதைக் கிலுகிலுப்பை என்று சொல்கிறோம். சேவல் எப்படிக் கூவுகிறது ? கொக்கரக்கோ என்று கூவுகிறது. அதனால் அதற்குக் கொக்கரக்கோ என்று பெயர் வைத்தால் என்ன ? ஒரு நாட்டில் அதற்கு கக்க—டூடுல்—டூ என்று ஒலியையே பெயராக

வைத்திருக்கிறார்கள். இப்படியே பழங்காலத்து மக்கள் ஒவ்வொரு சொல்லாகப் பேசக் கற்றுக் கொண்டார்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை : சொற்கள் பல ஏற்பட்ட பிறகுதான் மனிதருக்குக் கருத்துக்கள் வளரத் தொடங்கின. அதனால் நாகரிகமும் ஏற்பட்டது.

பேசத் தொடங்கும் போது ஐந்தாறு சொற்களே குழந்தைக்குத் தெரியும். பள்ளிக்கூடம் போன சிறுவன் ஏறக்குறைய நானூறு ஐநூறு சொல் கற்றுக்கொள்கிறான். பல புத்தகங்களைப் படித்த மாணவன் நாலாயிரம் ஐயாயிரம் சொற்கள் வரையில் கற்றுக்கொள்கிறான். திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், அவ்வையார், குமரகுருபரர் முதலான புலவர்களுக்குப் பத்தாயிரக் கணக்கான சொற்கள் தெரியும். ஆங்கிலப் பெரும்புலவர் ஷேக்ஸ்பியர்க்கு 21000 சொற்கள் தெரியுமாம். ஒவ்வொருவர்க்கும் அறிவு வளர வளர, ஏராளமான சொற்கள் பழக்கமாகிவிடும். இது இந்தக் காலத்தில் அமைந்துள்ள வாய்ப்பு. ஆனால், மிக மிகப் பழங்காலத்தில் மொழியே ஏற்படாத நாளில், சொற்கள் இல்லாமல் வாழ்ந்த மனிதன் எப்படி இருந்திருப்பான்? அவன் ஏறக்குறைய மிருகம் போல் நாகரிகம் இல்லாதவனாய் வாழ்ந்திருக்கவேண்டும். மொழி இல்லாத நிலை என்றால் அறிவு இல்லாத நிலை, நாகரிகம் இல்லாத நிலைதான் !

2. மொழியின் தொடக்கம்

கோழி பேசுகிறது. கோழியாவது, பேசுவதாவது, இது என்ன கதையா என்று எண்ணத்தோன்றும். ஆனால், நன்றாக எண்ணிப்பார்த்தால் தாய்க் கோழி தன் குஞ்சுகளோடு இருக்கும்போது எந்நேரமும் பேசிக்கொண்டே இருப்பது உண்மை என்று தெரியும். அது ஒரு பேச்சா, கிக் கிக் கிக் என்ற ஒலிதானே என்று எண்ணலாம். நமக்கு விளங்காத காரணத்தால் அதைப் பேச்சு அல்ல என்று தள்ளி விடக் கூடாது. சீனக்காரன் பேசுவது நமக்கு ஒன்றும் விளங்கவில்லை. அதனால் அது பேச்சு அல்ல என்று தள்ள முடியுமா? அப்படித்தான் கோழிப்பேச்சும். அதன் பேச்சு நமக்கு விளங்கவில்லை; ஆனால் அதன் இளங்குஞ்சுகளுக்கு நன்றாக விளங்குகிறதே. அவைகள் தாய் சொல்வதைக் கேட்டு அதன்படி நடப்பதைக் காணலாம். ஆகையால் அது பேச்சுத்தான்.

தாய்க்கோழி முன்னே போகிறது. அதைத் தொடர்ந்து கோழிக்குஞ்சுகள் போகின்றன. எதிரில் நிலத்தில் கம்பு அல்லது கேழ்வரகு கொஞ்சம் தெரிகிறது. அப்போது தாய்க்கோழி என்ன செய்கிறது? சைகை காட்டி அழைப்பதில்லை. கிக் கிக் கிக் என்று ஒலிக்கிறது. உடனே குஞ்சுகள் ஓடி வந்து தானியத்தைப் பொறுக்கித் தின்கின்றன. இன்னும் சிறிது நேரத்தில் ஒரு பருந்து மேலே பறக்கிறது. அதைப் பார்த்த தாய்க்கோழி கிக் கிக் கிக் என்று

ஒலியை வேறு வகையாக மாற்றி ஒலிக்கிறது. உடனே அத்தனை குஞ்சுகளும் ஓடி வந்து அதன் இறக்கைக்குள் புகுந்து பதுங்கிக்கொள் கின்றன. உணவைக் கண்டுபிடித்து அன்போடு அழைக்கும்போது ஒருவகை ஒலி, பருந்தைக் கண்டு எச்சரிக்கை செய்து அழைக்கும்போது வேறு வகை ஒலி—இவற்றைக் குஞ்சுகள் தெரிந்துகொண்டு தக்கபடி நடக்கின்றன. இதுதான் கோழிப்பேச்சு.

இந்தப் பேச்சு அந்தந்த நாடுகளின் அமைப்புக் கும் தட்ப வெப்ப நிலைக்கும் தகுந்தாற்போல் சிறிது சிறிது வேறுபட்டிருக்கும். நம் நாட்டுப்பசு 'ம்மா' என்று கத்துகிறது. சீமைப்பசு வேறு வகையாகக் கத்துகிறது. அப்படியே நம் நாட்டுக் கோழியின் பேச்சுக்கும் சீமைக்கோழியின் பேச்சுக்கும் கொஞ் சம் வேறுபாடு இருக்கும். வேறு வேறு நாடுகளில் வாழும் மக்களின் பேச்சும் இப்படித்தான் வேறு வேறு மொழியாக அமைந்திருக்கின்றன.

ஏதாவது துன்பம் வந்தபோது, நாம் "அப் பாடா, ஆ, ஆ" என்று சொல்கிறோம். 'ஆ ஆ' என்று ஒலிப்பதற்கு உணர்ச்சிஒலி என்று பெயர். துன்பம் வந்தபோது ஆங்கிலேயன் 'ஓ' என்றாவது 'ஒவ்' என்றாவது ஒலிக்கிறான். ஜெர்மானியன் 'அவ்' என்கிறான். இன்னொருவன் 'அவ்ஸ' என்கிறான். ஆப்கானியன் அழும்போது 'அய் அய்' என்று ஒலிக்கிறான். ஐரோப்பியன் 'ஓவ் ஓவ்' என்று ஒலித்து அழுகிறான். நாம் அழும்போது 'ஓ' '<u>ஊ</u>' என்ற இரண்டு ஒலியும் சேரும். உணர்ச்சி ஒலிகள் இப்படி நாட்டுக்கு ஒருவகையாக வேறுபடுவது போலவே, மற்ற ஒலிகளும் வேறுபடும்.

கோழிக்கும் மற்றப் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உணர்ச்சிஒலி ஒன்றுதான் தெரியும். மனிதனுக்கு இன்னும் இரண்டுவகை ஒலிகளும் தெரியும். அதனால்தான் மனிதனுடைய பேச்சு நாகரிகமாக வளர்ந்திருக்கிறது. உணர்ச்சி ஒலி, போலி ஒலி, குறிப்பு ஒலி என்ற மூன்று வகையும் இருப்பதால்தான், மனிதனுடைய பேச்சு நன்றாகப் பண்பட்டு, மொழி என்று பாராட்டப்படுகிறது.

போலிஒலி என்பது என்ன? பூனையைப் பற்றிக் குழந்தைக்குச் சொல்லும்போது மியா மியா என்று பூனை போலவே ஒலிக்கிறோம். அதுதான் போலிஒலி. கிலுகிலுப்பை, காக்கா இவைகள் அப்படிப்பட்ட ஒலிகளால் ஏற்பட்ட பெயர்கள். ஒன்றைப் போல ஒலிப்பதால், இவைகள் போலி ஒலியாக அமைந்த சொற்கள் ஆகும். இது எளிமையான வித்தை என்று எண்ணிவிடலாகாது. 'வொள் வொள்' என்று நாயைப் பார்த்து ஒலிப்பதும், 'மியா மியா' என்று பூனையைப் பார்த்து ஒலிப்பதும் சிறுவர்கள் எல்லார்க்கும் முடியும். குழந்தைகளாலும் அப்படி ஒலிக்க முடியும். ஆனாலும் இது எளிய வித்தை அல்ல. குரங்குக்கும் கோழிக்கும் மற்ற உயிர்களுக்கும் இந்த வித்தை தெரியாது. தெரிந்திருந்தால் அவைகள் நம்மோடு போட்டிக்கு வந்துவிட்டிருக்கும். நல்ல காலமாக இந்த வித்தை நமக்கு மட்டும் தெரியும்; பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் தெரியவே தெரியாது.

திறமையான குரங்கைப் பிடித்துப் பல காலம் பழக்கப்படுத்தினாலும் அது மனிதனைப் போல் ஒலிக்கக் கற்றுக்கொள்ள முடியாது. கோழிக்கு என்ன

பாடுபட்டுக் கற்றுக்கொடுத்தாலும் கிக் கிக் கிக் தவிர வேறு ஒன்றும் அதன் குரலில் வராது. அறிவுள்ள விலங்கு என்று சொல்லப்படும் யானையின் திறமையும் அவ்வளவுதான். சர்க்கஸில் ஒரு சின்ன மேசையின் மேல் ஏறிப் பிள்ளையார்போல் உட்காரும்படியாக யானைக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். யானையும் பாடுபட்டுக் கற்றுக்கொள்கிறது. அந்த யானையும் நம்மைப் போல் ஒலிக்கமுடியாது. நாய் நம்மோடு தலைமுறை தலைமுறையாக நெருங்கிப் பழகுகிறது. அறிவுள்ளது என்றும், நன்றி மிகுந்தது என்றும் சொல்லப்படுகிறது. அந்த நாயும் நம்மைப் போல் ஒலிக்க முடியாது. ஆனால், மனிதன் முயற்சி செய்தால், நாயைப் போல் குரைக்க முடியும்; யானையைப் போல், குரங்கைப் போல், கோழியைப் போல், மற்ற எதையும் போல் ஒலிக்க முடியும். இப்படிப்பட்ட அரிய பெரிய வித்தை மனிதனுக்கு இயல்பாக அமைந்திருக்கிறது. அதனால்தான், மனிதன் மற்றவர்களிடமிருந்து மொழியைக் கற்றுக் கொள்ள முடிகிறது. ஒரு குழந்தை தன் அக்காவைப் போல் அப்பாவைப் போல், அம்மாவைப் போல் பேசக் கற்றுக்கொள்வதற்கும் இந்த ஆற்றலே காரணம்.

ஒன்று கேட்கலாம். கிளி நாம் சொல்வதைத் திருப்பிச் சொல்கிறதே என்று கேட்கலாம். உண்மைதான். கிளி ஒன்றுதான் அப்படி ஒலிக்க முடிகிறது. ஆனால் அதற்கும் ஒரு குறை இருக்கிறது. 'சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை' என்று பழமொழி வழங்குகிறது. சொன்னதைத் திருப்பிச் சொல்வதும் வித்தைதான். ஆனால் எதை யாரிடத்தில் எப்போது சொல்லவேண்டும் என்று

தெரியாமல், கிளி எதையாவது எப்போதாவது திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கும். சிறுவர்கள் இப்படிச் சொல்வதில்லை. எப்போது எதைச் சொல்ல வேண்டும் என்று அறிந்து சொல்கிறார்கள். தங்கை அண்ணனைப் பார்த்து 'அண்ணா' என்கிறாள். தாயைப் பார்த்தபோது 'அம்மா' என்று அழைக்கிறாள். இப்படியே மற்றவர்களிடமும் சொல்ல வேண்டியதை அறிந்து சொல்கிறாள். கிளி அப்படி அல்ல; யாரைப் பார்த்தாலும் எல்லாவற்றையும் சொல்லிவிடும்; கற்றுக்கொண்ட ஒலிகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும். கேட்ட ஒலிகளைக் கற்றுக்கொண்டு, அவற்றை வேண்டியபோது அறிவோடு பயன்படுத்தும் திறமை மனிதனுக்கு மட்டுமே அமைந்திருக்கிறது. அதுவே மொழியை வளர்க்கக் காரணமாக இருந்தது; இருந்துவருகிறது.

மூன்றாவதாக உள்ளது குறிப்பொலி. இந்த ஒலியால் பிறந்த சொற்களே மொழியில் மிகுதியாக உள்ளன. சலவைத் தொழிலாளி துணி வெளுத்துக் கொண்டுவரும்போது, துணிகளின் மூலையில் ஒரு வகை அடையாளம் வைத்திருக்கிறான். ஒவ்வொரு வீட்டுத் துணிக்கும் ஒவ்வோர் அடையாளம் வைக்கிறான். அதுபோல் பழங்காலத்து மனிதன் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வோர் ஒலியை அடையாளமாக வைத்தான். ஒன்றைப் பார்த்து 'மான்' என்றான். மற்றொன்றைப் பார்த்து 'முயல்' என்றான். இன்னொன்றைப் பார்த்து 'எலி' என்றான். வேறொன்றைப் பார்த்து 'நரி' என்றான். இப்படி ஏற்பட்ட அடையாள ஒலிகளே எல்லாச் சொற்களும். சொற்களில் சிலவற்றிற்குக் காரணம் தெரியவில்லை. சிலவற்றிற்

குக் காரணம் தெரிகிறது. காரணம் தெரியாதவை பல. இவற்றை அடையாள ஒலிகள் என்றே கொள்ள வேண்டும். இவைகளையே குறிப்பொலிகள் என்று சொல்வார்கள். தொடக்கத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகை ஒலியை அடையாளமாகக் கொண்டு பேசியிருப்பான். பிறகு அது இரண்டு மூன்று பேர் ஒத்துக்கொண்டு பொருள் உணர்ந்த சொல்லாகியிருக்கும். நாளடைவில் இருபது முப்பது பேர், இருநூறு முந்நூறு பேர் அந்தச் சொல்லை அறிந்து பேசியிருப்பார்கள். இவ்வாறு செல்வாக்கு உடைய ஒருவன் சொன்ன சொல்லே படிப்படியாகப் பலரிடமும் பரவிப் பலரும் பேசும் பொதுச் சொல்லாக அமைந்திருக்கும்.

இப்போது கடைக்குப் போய் ஒரு படி அரிசி வாங்க வேண்டுமானால், நாம் என்ன செய்கிறோம்? வெள்ளிரூபாய் ஒன்று எடுத்துச் செல்கிறோம்; அல்லது, காகித நோட்டு எடுத்துச் செல்கிறோம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் என்ன செய்தார்கள்? அப்போது நாணயங்கள் மிகுதியாக இல்லை. எங்கும் பண்ட மாற்று இருந்தது. ஆடு வளர்த்துப் பிழைத்தவர்கள் அரிசி வாங்கப் போனபோது, ஆட்டையோ அல்லது கம்பளி முதலியவற்றையோ கொண்டுபோய்க் கொடுத்து அரிசி வாங்கினார்கள். பசு வளர்த்தவர்கள் பாலையோ நெய்யையோ கொடுத்து அரிசி வாங்கினார்கள். மீன் பிடித்துப் பிழைத்தவர்கள் அவ்வாறே மீனைக் கொடுத்து அரிசியைப் பெற்றார்கள். மலையில் வாழ்ந்தவர்கள் அங்கே கிடைத்த தேன், கிழங்கு, பழம், சந்தனம் முதலியவைகளில்

எதையாவது கொடுத்து வாங்கினார்கள். இப்போது இந்தப் பண்ட மாற்று முறை மறைந்துவிட்டது. நாணய முறை வந்துவிட்டது. ஒரு ரூபாய் வெள்ளி நாணயம் அல்லது ஒரு ரூபாய்க் காகித நோட்டு எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அரசாங்கம் அப்படி ஏற்பாடு செய்திருக்கிறது. பழங்காலத்து மனிதர் பேசிய சொற்களும் பண்டமாற்றுப் போல் இடத்திற்கு ஒருவகையாக வேறு வேறாக இருந்தன. அவர்கள் அங்கங்கே குடும்பம் குடும்பமாக, கூட்டம் கூட்டமாக வாழ்ந்து, பொருள்களுக்கு வேறு வேறு பெயர் வைத்துப் பேசிவந்தார்கள். மான் என்பதற்கு அந்தப் பழங்காலத்தில்-மொழியின் தொடக்கக் காலத்தில் - வேறு வேறு பெயர்கள் இருந்திருக்கும். ஆனால் செல்வாக்கு உடைய ஒரு தலைவன் அதற்கு மான் என்று பெயர் சொல்லிப் பேசியிருக்கலாம். நாளடைவில் அவன் வைத்த பெயரை அவனுடைய கூட்டத்தார் எல்லாரும் ஏற்றுக்கொண்டார்கள். பிறகு மற்றக் கூட்டத்தாரும் ஒப்புக்கொண்ட சொல்லாக அமைந்துவிட்டது. 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்பதே அந்தப் பழங்காலத்தில் இருந்த நிலைமை. ஆளும் தலைவன் சொன்ன சொற்களை அறிந்து மற்றவர்கள் எல்லோரும் பேசினார்கள். குறிப்பிட்ட ஒருவகை நாணயங்களை எல்லோரும் ஒத்துக்கொள்வது போல், ஒருவகைச் சொற்களையே எல்லா மக்களும் பேசக் கற்றுக்கொண்டார்கள். ஆனால், அமெரிக்காவின் நாணய முறை வேறு; இந்தியாவின் நாணய முறை வேறு; இலங்கையின் நாணய முறை வேறு. அதுபோல்தான், மொழியும் தமிழ்

நாட்டில் ஒருவகையாகவும் இங்கிலாந்தில் ஒரு வகை யாகவும் சீனுவில் ஒரு வகையாகவும் வேறு வேறு மொழியாக அமைந்து வளரத் தொடங்கியது.

இப்படிப் பல பொருளுக்கும் பல தொழிலுக் கும் பல சொற்கள் ஏற்படுத்தி, மொழியை வளர்ப் பதற்குக் காரணமாக இருந்தது மனிதனுடைய குரல்தான். மனிதன் மற்ற விலங்குகளைப் போல் இல்லாமல், நிமிர்ந்து நின்று கைகளைப் பயன்படுத்த முடிந்த காரணத்தால், அவனுடைய வாய்க்கு வேலை குறைந்தது. விலங்குகளைப் போல் எந்நேரமும் உணவைத் தேடித் தின்றுகொண்டிருக்கும் ஓயாத வேலை மனிதனுக்கு இல்லை. ஆகையால், உறங்கும் நேரமும் உண்ணும் நேரமும் தவிர, மற்ற நேரம் எல்லாம் மனிதனுக்கு வாய் ஓய்வாகப் பயன் பட்டது; குரல்ஒலி பயன்பட்டது. முதலில் அந்தக் குரல் ஒலியை உணர்ச்சிக்குப் பயன்படுத்தினுன்; பிறகு, போல ஒலிப்பதற்குப் பயன்படுத்தினுன்; அதன் பிறகு அடையாள ஒலிகளாகச் சொற்களை ஏற்படுத்திக்கொள்வதற்கும் பயன்படுத்தினுன். இந்த மூன்று வகையான ஒலிகளும் சேர்ந்துதான் மொழி ஏற்படத் தொடங்கியது. இதுதான் மொழியின் தொடக்கம்.

3. எழுதா இலக்கியம்

கிராமங்களில் உழவர்கள் பாடும் ஏற்றப்பாட்டு, ஏர்ப்பாட்டு முதலியவைகளைக் கேட்கிறோம். அவை இன்றோ நேற்றோ பாடப்பட்ட புதிய பாடல்கள் அல்ல. தலைமுறை தலைமுறையாகப் பாடி வந்த பாட்டுக்கள் அவை. ஒருவர் மற்றொருவர்க்குச் சொல்ல, அவர் இன்னொருவர்க்குச் சொல்ல, இப்படியே நெடுங் காலமாகக் கற்றுக்கொள்ளப்பட்ட பாட்டுக்கள் அவை. இப்போதுதான் அவற்றை எல்லாம் நாட்டுப் பாடல் என்று பொறுக்கிச் சேர்த்துப் புத்தகமாக்கி வருகிறார்கள். புத்தகம் இன்று தோன்றியது. ஆனால், அந்தப் பாடல்கள் முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை. இன்னும் நெடுங்காலத்திற்கு முன்னே தோன்றியிருக்கவேண்டும் என்றும் சொல்ல லாம்.

மாலை நேரத்தில் குழந்தைக்கு நிலவைக் காட்டி, தாய் பாடுகிற பாட்டைக் கேட்டிருக்கிறோம். "நிலா, நிலா எங்கே போகிறாய்? மலைக்குப் போகிறேன். மலைக்கு எதற்கு? மண் எடுக்க" என்று தாய் பாட்டுப் பாடுகிறாள். அந்த நிலாப்பாட்டை இப்பொழுது அச்சுப் புத்தகங்களில் பார்க்கிறோம். இருபது, முப்பது ஆண்டுகளுக்குமுன் அந்தப் பாட்டை யாரும் புத்தகத்தில் சேர்க்கவில்லை. ஆனால் அப்போதும் பாட்டு இருந்தது. பாட்டை ஒவ்வொரு வீட்டிலும் தாய்மார்கள் குழந்தைகளுக்குச் சொல்லிவந்தார்கள். குழந்தையைத் தொட்டிலில் போட்டு, " ஆராரோ

ஆரிவரோ" என்று பாடுகிறார்கள். அதுவும் தமிழ் நாட்டில் தலைமுறை தலைமுறையாக வரும் பழைய பாட்டுத்தான். இப்படி ஏட்டில் எழுதாமல், புத்தகத்தில் சேர்த்து அச்சிடாமல், தலைமுறை தலைமுறையாகப் பாடிவரும் பாட்டுக்கள் எவ்வளவோ இருந்தன ; இன்றும் இருக்கின்றன.

அதனால் புத்தகம் இல்லாமலேயே, ஏடு இல்லாமலேயே பாட்டு இருந்துவந்தது என்று சொல்ல வேண்டும்.

அச்சுப் புத்தகம், பனை ஓலைஏடு இவைகள் எல்லாம் தோன்றாத காலத்தில் படித்தவர்கள் எப்படிப் படித்துவந்தார்கள்? நிலாப்பாட்டு, ஆராரோ பாட்டு, ஏர்ப்பாட்டு, ஏற்றப்பாட்டு இவைகளைப் போல்தான் ஒருவரிடம் மற்றொருவர் கேட்டுக் கற்றுக்கொண்டார்கள். அப்போது பார்த்துப் படிக்கும் கடமை இல்லை; கேட்டுத் தெரிந்துகொள்ளும் கடமையே இருந்தது. ஆகவே, அந்தக் காலத்திலும் கதையும், பாட்டும், நாடகமும் இல்லாமற் போகவில்லை ; இருந்தன. ஆனால்,புத்தகங்கள்,ஏடுகள் இல்லை; சொல்வோருக்கு வாய் இருந்தது ; கேட்போருக்குக் காது இருந்தது. இருவருக்கும் நல்ல நினைவு இருந்தது. கேட்டவர்கள் மறக்காமல் நினைவில் வைத்துக்கொண்டு மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுத்துவந்தார்கள்.

தமிழுக்கு மட்டும் அல்ல, எல்லா மொழிக்கும் இப்படிப்பட்ட ஒரு காலம் இருந்திருக்கிறது. வேதங்கள் எழுதப்படாமல் இருந்துவந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலத்தில் குரு அவற்றை மாணவர்களுக்குச் சொல்ல, அவர் அடுத்தபடி குருவான பிறகு தம்முடைய மாணவர்க்குச் சொல்லிவந்தார்.

இப்படி நெடுங்காலம் வேதங்கள் இருந்துவந்தன. அதனால் அவற்றை எழுதாக்கிளவி என்றும் சொல்வார்கள். லத்தீன், கிரேக்கு, சீனம் முதலான பல மொழிகளுக்கும் மிகப் பழங்காலத்தில் இப்படிப் பட்ட நிலை இருந்தது. தமிழிலும் இப்படி இலக்கியம் இருந்துவந்து, பிறகு எழுத்துக் கண்டு பிடித்து ஏடுகளில் எழுதத் தொடங்கி நூல்கள் ஏற்பட்டன. சிறுவர்கள் இப்போது அவ்வையார் பாடிய "சாதி இரண்டொழிய வேறில்லை" என்ற பாட்டைப் படிக்கிறார்கள். முதலில் பள்ளிக்கூடத் தில் ஆசிரியர் அதற்குப் பொருள் சொல்லிக்கொடுக் கிறார். அதன் பிறகு வீட்டுக்கு வந்ததும் சிறுவர்கள் அதைத் திரும்பத் திரும்பப் படித்து மனப்பாடம் செய்கிறார்கள். அப்படியே முதலில் பொருள் தெரிந்துகொண்டு பிறகு ஒவ்வொரு பாட்டையும் மனப்பாடம் செய்கிறார்கள். பழங்காலத்துப் பள்ளிக் கூடத்தில் அப்படி நடக்கவில்லை. முதலில் ஆசிரியர் பாட்டைப் படித்துக் காட்டுவார்; மனப்பாடம் செய்து வரும்படியாக மாணவர்களுக்குச் சொல்வார். பாட்டை மனப்பாடம் செய்து ஒப்புவித்து முடித்த பிறகுதான் ஆசிரியர் அதற்குப் பொருள் கருத்து எல்லாம் சொல்லிக்கொடுப்பார். இப்படித்தான் திருப்புகழ் முதலான பாட்டுக்களைப் பழங்காலத்தில் மாணவர்கள் உருப்போட்டு ஒப்புவிப்பார்கள். ஒப்பு வித்து முடிந்த பிறகு ஆசிரியர் பாடம் சொல்லுவார். புத்தகம் பல இல்லாமல் கல்வி இருந்துவந்த பழங் காலத்து வழக்கத்தைக் காட்டுகிறது இது.

இன்னொன்றும் எண்ணிப் பார்க்கலாம். ஆங்கி லத்தில் (very pure) என்று சொல்கிறோம். ஆனால்

எழுதும்போது இரண்டு சொற்களுக்கும் இடையில் ப் (p) சேர்ப்பதில்லை. வெரிப் பியூர் என்று ஒலிக்கிறோம்; வெரி பியூர் என்று எழுதுகிறோம். தமிழில் அப்படி அல்ல. மிக பெரியது என்ற இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதும்போது மிகப் பெரியது என்றே 'ப்' சேர்த்து எழுதுகிறோம். அது ஏன்? பழங்காலத்தில், காதால் கேட்ட ஒலியை ஒலித்த அப்படியே எழுதிவைத்த பழக்கம்தான் அதற்குக் காரணம். தமிழ் மிகப் பழைய மொழி; எழுதாமல் கேட்டுவளர்ந்த இலக்கியம் இருந்துவந்த மொழி. அதனால் இந்த ஒலியைக் காதால் கேட்டு எழுதிய பழக்கப்படியே எழுதுகிறோம். ஆங்கிலம் அப்படி அல்ல. அது சில நூற்றாண்டுகளுக்கு முன்தான் வளர்ந்தது. அதனால் ஆங்கிலத்தில் இந்த ஏற்பாடு இல்லை.

இப்படி எல்லாவற்றையுமே கேட்டுக் கற்றுக் கொண்டமையால், அந்தப் பழங்காலத்தில் கல்வி மிக முயற்சியானதாக இருந்திருக்க வேண்டும். நம்மைவிட நினைவு மிகுதியாக இருந்திருந்தால்தான் அந்தக் காலத்தில் மக்கள் படித்திருக்க முடியும். இப்போது நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம். உடனே புத்தகத்தை எடுத்துப் பார்க்கிறோம். மறந்துவிட்டதைத் தெரிந்துகொள்கிறோம். அந்தப் பழங்காலத்தில் மறந்துவிட்டால் தொல்லைதான். மறதி உள்ளவர்களுக்குக் கல்வியே வராது. ஏன் என்றால் பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டிற்கு வந்ததும் நமக்குப் புத்தகம் இருக்கிறது. அவர்களுக்கு என்ன இருந்தது? ஒன்றும் இல்லை. அதனால் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்து நினைவு வரவில்லையே, மறந்து போய் விட்டதே என்று அந்தக் காலத்தார் மிகவும் வருத்

தப்பட்டிருப்பார்கள். அந்த முயற்சியால் நினைவின் ஆற்றலை வளர்த்துக் கொண்டார்கள்.

அதற்காக ஒரு வழி கண்டுபிடித்தார்கள். எப்படி இருந்தால் சொற்கள் மறந்துபோகாம லிருக்கும் என்று பார்த்தார்கள். எளிய வழி கண்டு பிடித்தார்கள். சொற்களைச் சங்கிலிபோல் கோத்து நினைவில் வைத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டார் கள். ஓசையை மாலை போல் கோத்து இணைத்து, நினைவில் வைக்கக் கற்றுக்கொண்டார்கள். புத்த கத்தில் இல்லாத சொற்களைச் சிறுவர்கள் இப்படி விளையாட்டாகக் கற்றுக்கொள்கிறார்கள். ஆனால் அது அவர்களுடைய இலக்கியம் என்பது அவர்களுக்கே தெரியாது. மரம் மரம், என்ன மரம், வாழை மரம், என்ன வாழை, பூவாழை, என்ன பூ, தாமரைப்பூ, என்ன தாமரை, வெள்ளைத் தாமரை, என்ன வெள்ளை, பால் வெள்ளை, என்ன பால், பசும்பால், என்ன பசு...என்று இப்படியே சொற்களை வேடிக்கையாகச் சங்கிலி போல் கோத்து விட்டு, சிறுவர்கள் எளிதில் நினைவு வைத்துக்கொள் கிறார்கள். மற்றொரு வழி, மாலைபோல் ஓசையை இணைத்து எதுகை மோனை அமைத்து நினைவில் வைத்துக்கொள்வது. அதுதான் நாம் படிக்கும் பாட்டுப் போல் ஒருவகை ஓசையால் சேர்த்துவைப் பது. அப்படி இருந்தால் எளிதில் மறந்து போகாது; மறந்தாலும் பாடிப் பார்த்தால் நினைவுக்கு வந்து விடும்.

இதனால்தான் பழங்காலத்தில் செய்யுளே மிகுதியாக இருந்துவந்தது. பிற்காலத்தில்தான் உரைநடை வளர்ந்தது. இதில் எதுகை மோனை

ஓசைஇணைப்பு சொல்கோப்பு ஒன்றுக்கும் இடம் இல்லை. செய்யுளில் இவற்றிற்கு இடம் உண்டு. அதனால் பழங்காலத்தில் இலக்கியம் எல்லாம் செய்யுளாக இருந்துவந்தது; அதனாலேயே தலை முறை தலைமுறையாக மாருமல் இருந்துவந்தது. இல்லையானால் மொழி விரைவில் மாறி மாறி, யாருக்கும் தெரியாததாக ஆகிவிட்டிருக்கும்.

ஆப்ரிக்காவுக்கு ஒரு பாதிரியார் தொண்டு செய்யப் போனராம். ஆப்ரிக்காவில் இருந்த காட்டு மிராண்டிகளோடு பழகி, அவர்களுடைய மொழியைத் தெரிந்துகொண்டாராம். சொற்களை எல்லாம் எழுதி வைத்துக்கொண்டு சொந்த நாட்டுக்குத் திரும்பிப்போய்ப் பத்து ஆண்டுகள் கழித்து அதே இடத்திற்கு வந்தாராம். அப்போது அந்தக் காட்டு மிராண்டிகள் பேசிய பேச்சுக் கொஞ்சமும் விளங்க வில்லையாம். அவர் பேசினல் அவர்கள் மருண்டு மருண்டு விழித்தார்களாம். அவர் எழுதி வைத்த சொற்கள் எவ்வளவோ மாறிவிட்டன. பத்து ஆண்டுகளில் அந்த மொழி அவ்வளவு வேறுபாடு அடைந்துவிட்டது. காரணம் என்ன? அவர்கள் காட்டுமிராண்டிகள்; எழுதா இலக்கியமும் இல்லாத அநாகரிக வாழ்க்கை வாழ்ந்தவர்கள். அதனால்தான் அவர்கள் பேசிய மொழி சில ஆண்டுகளில் அடியோடு மாறிக் கெட்டுவிட்டது.

ஆகையால், பழங்காலத்தில் எழுதா இலக்கியம் இருந்ததற்கும் ஓரளவு நாகரிகம் இருந்திருக்கவேண்டும் என்று விளங்குகிறது. அந்த இலக்கியம் பாட்டாகவும் பாட்டுப் போலவும் இருந்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

4. எழுத்தின் தொடக்கம்

எவ்வளவோ காலத்திற்குமுன் இந்தத் தமிழ் நாட்டில் இருந்தவர் திருவள்ளுவர். அவர் என்னென்னவோ பேசியிருப்பார். அந்தப் பேச்செல்லாம் இப்போது நாம் கேட்க முடியுமா ? முடியாது. ஆனால் அவர் எண்ணிய எண்ணங்களை எல்லாம் நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இதை நினைத்துப் பார்த்தால் பெரிய வியப்பாக இருக்கிறது. அந்தப் பெரியவர் தமிழில் தான் எண்ணினார். ஆனால் அவர் எண்ணிவிட்டு மறைந்து இராண்டாயிரம் ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு நாம் அவருடைய எண்ணங்கள் இப்படிப் பட்டவை என்று தெரிந்து கொள்ள முடிகிறது. இப்படி எண்ணங்கள் காற்றோடு காற்றாய் மறைந்து போகாமல் இன்னும் தெரிவதற்குக் காரணம் எது ? அவர் பேசிய தமிழ் அல்ல ; எழுதி வைத்த தமிழ்தான். எழுத்துக்கு அவ்வளவு வல்லமை இருக்கிறது !

இப்படி எழுத்து என்று ஒன்றைக் கண்டுபிடிக்காமல் இருந்தால் இன்றைக்கு நாம் படிக்கும் புத்தகம் ஏற்பட்டிருக்குமா? பத்திரிகை ஏற்பட்டிருக்குமா ? அவ்வளவு ஏன் ? ஊரிலிருந்து யாராவது நமக்குத் தபால் எழுத முடியுமா ? நாம் பதில் எழுத முடியுமா ? எவ்வளவோ குறை ஏற்பட்டிருக்கும். நாம் இப்போது இருக்கும் நாகரிக நிலைக்கு வந்திருக்க முடியாது.

இவ்வளவு சிறப்பு உடைய எழுத்து, தமிழுக்கு ஒரு வகையாக இருக்கிறது ; தெலுங்குக்கு ஒரு வகையாக இருக்கிறது ; இப்படியே ஒவ்வொரு மொழிக்கும் வேறு வேறு எழுத்து இருக்கிறது. இந்த எழுத்து முதல்முதலில் எப்படி ஏற்பட்டிருக்கும்? அதுவும் ஒரு பெரிய கதைதான். பள்ளிக்கூடத்தில் சில கொண்டாட்டம் நடக்கும்போது, கொடி போல், பூப் போல் ஏதாவது ஒன்றைச் சிறுவர்கள் சொக்காயில் குத்திக்கொள்கிறார்கள். அது எதற்காக? அந்தக் கொண்டாட்டத்தின் அடையாளத்திற்கு ஆகும். சில மோட்டார்களில் அசோக சக்கரம் போட்ட கொடி பறக்கிறது. அதுவும் அந்த மோட்டார்களில் அமைச்சர்கள் போகிறார்கள் என்று அறிவிப்பதற்காக ஆகும். அதுவும் அடையாளம்தான். இப்படியே பழங்காலத்தில் பல அடையாளங்கள் இருந்திருக்கின்றன. பழங்காலத்தில் ஒரு கொடியில் அல்லது முத்திரையில் மீன் இருந்தால் அது பாண்டிய நாட்டுக் கொடி அல்லது முத்திரை என்று தெரிந்துகொள்வார்கள். சோழ அரசன் புலியை அடையாளமாக வைத்திருந்தான். சேரன் வில்லை அடையாளமாக வைத்திருந்தான்.

இப்படி ஒவ்வோர் ஒலிக்கும் அடையாளமாக ஏற்பட்டதுதான் எழுத்து. சில வீடுகளில் தயிர்க்காரி வந்து தயிர் கொடுத்துவிட்டு, சுவரில் கணக்கு எழுதுவதைப் பார்த்திருக்கிறோம். சுவரில் 1, 2, 3, 4 என்று எழுதமாட்டாள். அவளுக்குப் படிப்புத் தெரியாது. அதனால் கோடுகள் கிழிப்பாள். அல்லது புள்ளிகள் வைப்பாள். மாதக் கடைசியில் அந்தப் புள்ளிகளை எண்ணி இவ்வளவு நாள் இவ்

வளவு தயிர் வார்த்திருக்கிறேன் என்று கணக்குச் சொல்லிப் பணம் வாங்குவாள்.

இப்படித்தான் முதல்முதலில் சில எழுத்துக்களை எழுதியிருக்க வேண்டும். சைனுவில் இருக்கிற எழுத்துக்களைப் பார்த்தால் இது நன்ருகத் தெரிகிறது. வெளிச்சம் என்பதை நாம் எப்படி எழுதுகிரும்? வெ-ளி-ச்-ச-ம் என்று ஐந்து எழுத்துக்களை எழுதுகிரும். சீனமொழியில் சூரியன்போல் ஒரு வட்டம் எழுதி அதன் பக்கத்தில் சந்திரன் போல் சின்ன வட்டமும் சேர்த்து எழுதினுல் அது வெளிச்சமாம். சூரியனும் சந்திரனும் இருந்தால்தானே வெளிச்சம் ? அதனுல் அந்த உருவங்களையே எழுதுகிருர்கள். இப்படியே ஒருவன் அழுவதைத் தெரிவிக்க வேண்டுமானுல், கண்ணீர் என்று எழுத வேண்டுமானுல், கண்ணைப் போல் ஓர் எழுத்து எழுதி அதன் பக்கத்தில் ஒரு துளித் தண்ணீரைப் போல் ஒரு புள்ளியைப் போடுவார்களாம். தண்ணீர் வேண்டும் என்று ஒருவன் கேட்பதாக வைத்துக்கொள்வோம். அப்போது தண்ணீர் என்பதை எழுத வேண்டுமானுல் நாக்கைப் போல் ஒரு வளைந்த கோடு போட்டு, அதன்மேல் ஒரு துளிபோல் புள்ளி எழுதுவார்களாம். வாயைப் போல் எழுதி அதன் பக்கத்தில் பறவையைப் போல் எழுதினுல் பாட்டுப் பாடு என்று பொருளாகுமாம். இப்படி எதை எடுத்தாலும் சைனுவில் ஒவ்வொரு வகையான எழுத்து உண்டு. சீன எழுத்துக்கள், தமிழில் இருப்பது போல் 12 உயிரெழுத்தும் 18 மெய்யெழுத்தும் அல்ல ; சில நூறு எழுத்துக்கள் மட்டும் அல்ல. ஒருகாலத்தில் ஏறக்குறைய 40000

எழுத்துக்கள் இருந்தனவாம்! தமிழிலும் ஒருகாலத்தில் இப்படி இருந்திருக்கலாம். தமிழ் எழுத்திற்கு ஒரு காலத்தில் கண்ணெழுத்து கோலெழுத்து என்று பெயர்கள் இருந்தன. அப்போது சீன எழுத்தைப் போல் எழுத்துக்கள் சித்திரங்களாக இருந்தன. கற்றுக்கொள்வதற்கு அவைகள் பெரிய தொல்லையாக இருந்திருக்கும். அதனால்தான் அவற்றை விட்டுவிட்டு இப்போது உள்ள அ, ஆ, இ முதலான எளிமையான எழுத்துக்களை வைத்துக்கொண்டார்கள்.

சீன எழுத்துக்களைப் போலவே ஜப்பான் எழுத்துக்களையும் எழுதுகிறார்கள். வெளிநாட்டுப் பட்டாசுக் கட்டுக்களைப் பார்த்திருக்கிறோம். அந்தப் பட்டாசுகளைச் சீனாவிலும் ஜப்பானிலும் செய்து அனுப்புவார்கள். அவற்றின்மேல் இருக்கும் எழுத்துக்கள் சீன ஜப்பானிய எழுத்துக்கள். சீனப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அவைகளை எப்படிக் கற்றுக்கொள்கிறார்களோ பாவம் என்று நமக்கு இரக்கமாக இருக்கும். ஆனால் எல்லா நாட்டிலும் முதலில் இப்படி இருந்து இருந்துதான் எளிய எழுத்துக்களை நாளடைவில் கண்டுபிடித்தார்கள். ஆங்கில எழுத்துக்கள் A, B, C என்று சொல்கிறோம். முதலில் ஒவ்வோர் ஆங்கில எழுத்தும் ஒவ்வொரு பெயராக, சொல்லாக, பொருளுக்கு அடையாளமாக இருந்ததுதான். அதனால்தான் A என்பதை ஆல்பா என்றும் B என்பதை பேடா என்றும் சொல்வார்கள். மற்ற எழுத்துக்களும் இப்படியே. பேடா என்றால் முதலில் வீடு என்று பொருள். வீடு என்பதை எழுதும்போது பேடா

என்று எழுதினார்கள். பிறகு பேடா என்பதில்உள்ள 'ப்' என்ற ஒலிக்கு அது அடையாளமாயிற்று.

எகிப்து மொழியை ஆராய்ந்தாலும் இந்த உண்மை தெரியும். அங்கே சிங்கத்திற்கு 'லாபோ' என்று பெயர். லாபோ என்று எழுதவேண்டுமானால் சிங்கத்தின் படத்தையே எழுதினார்கள். இப்போது அந்தப் படம் மாறி மாறி ஒரு சிறு எழுத்து ஆகிவிட்டது. அந்த எழுத்து இப்போது ஒலிக்கு அடையாளமாகி 'ல்' என்ற ஒலியைக் குறிக்கிறது. இப்படியே கழுகுக்கு 'அஹாம்' என்று பெயர். அதனால் கழுகுபோல் எழுதி, அதுவே 'அ' என்ற எழுத்து ஆகிவிட்டது. சீன மொழியில் ஏராளமான எழுத்துக்கள் இருக்கின்றன அல்லவா? நெடுங்காலமாக அவர்கள் இப்படி எழுத்தை ஒலிக்கு அடையாளம் ஆக்காமல், சொல்லாகவே வைத்திருந்ததுதான் அதற்குக் காரணம். ஆனால் அவர்களிடமிருந்து எழுத்துக் கற்றுக்கொண்ட ஜப்பான்காரர் சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டார்கள். நம்மைப் போல் எழுத்தைச் சேர்த்துச் சொல் எழுதக் கற்றுக்கொண்டார்கள். பிறகு சீனக்காரரும் அவர்களைப் பார்த்துத் திருந்திவிட்டார்கள்.

சில மொழிகளின் எழுத்துக்களில் புள்ளிகள் மிகுதியாக இருக்கும். வேறு சில மொழிகளில் கோடுகள் நிறைய இருக்கும். வேறு சில மொழிகளில் வளைவுகள் நிறைய இருக்கும். இப்படி வேறு வேறு வகையாக இருப்பது ஏன்? நம்முடைய நாட்டில் பனை ஓலைகளில் எழுதிப் பழகினார்கள். சில நாடுகளில் ஆடு மாடு முதலியவற்றின் தோலில் எழுதிப் பழகினார்கள். சில நாடுகளில் மண்

மெழுகிய ஓடுகளின்மேல் கீறல் கீறல்களாக எழுதிப் பழகினார்கள். இப்படியே வேறு வேறு பொருளில் வேறு வேறு கருவியால் எழுதக் கற்றுக்கொண்டார்கள். அதனால் சில நாடுகளில் புள்ளி, சில நாடுகளில் கோடு, சில இடங்களில் வளைவு இப்படி ஒவ்வொன்று எழுதுவதற்கு எளிமையாக இருந்திருக்கும். எல்லாவற்றிற்கும் முதலில் கல்லிலும் மரத்திலும் எழுத்துக்களைச் செதுக்கக் கற்றுக்கொண்டார்கள். இப்போது எழுதுவது எவ்வளவு எளிமையாக இன்பமாக இருக்கிறது எண்ணிப்பார். வழவழப்பான வெள்ளைக் காகிதத்தில் அழகான பேனாவைக் கொண்டு அருமையாக எழுதக் கற்றுக்கொண்டது பெரிய முன்னேற்றம்தான்.

எழுதும் முறையிலும் இப்படியே வெவ்வேறு ஏற்பாடு இருந்துவருகிறது. நாம் இடப்பக்கத்திலிருந்து வலப்பக்கத்தை நோக்கி எழுதுகிறோம். உருது கற்பவர்கள் வலத்திலிருந்து இடமாக எழுதுகிறார்கள். கிரேக்கர்கள் முதலில் இரண்டு வகையாகவும் கலந்து எழுதினார்களாம். சீன மொழியில் வலக்கை ஓரமாக மேலே இருந்து கீழே எழுதிக்கொண்டு வரவேண்டும். பழனி என்றால் நாம் ப-ழ-னி என்ற மூன்று எழுத்துக்களையும் பக்கம் பக்கத்தில் எழுதுகிறோம். சீனமொழியில் அப்படி அல்ல; மேலே 'ப', அதற்குக் கீழே 'ழ', அதற்குக் கீழே 'னி' எழுதவேண்டும். ஜப்பான்காரரும் அப்படித்தான். ஆனால் அவர்கள் இடக்கை ஓரமாக எழுதுகிறார்கள்.

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தால் இப்போது வேடிக்கையாகவே தோன்றும். ஆனால்

பழங்காலத்து மக்கள் எவ்வளவு பாடுபட்டு இவற்றை உண்டாக்கி யிருக்கவேண்டும்? எதிரே இருந்தவர்களுக்குக் கருத்தைச் சொல்வதற்காக மொழி ஏற்பட்டது; பேச்சு ஏற்பட்டது. மிகத் தொலைவில் இருந்தவர்களுக்குக் கருத்தைத் தெரிவிப்பதற்காக, குரல்ஒலி பயன்படவில்லை. அப்போது மரப்பலகை, அல்லது பட்டை, அல்லது தோல், அல்லது ஓலை, ஏதோ ஒன்றில் எதையோ எழுதி மற்றொருவனிடம் கொடுத்து அனுப்பினான் பழங்காலத்து மனிதன். அந்த எழுத்து எப்படி எப்படியோ மாறி அ, ஆ, இ, ஈ என்று சுருக்கமாக அமைந்திருக்கிறது. இந்த எழுத்து நாளடைவில் எவ்வளவு அழகாக, எவ்வளவு ஒழுங்காக அமைந்து விட்டது! எவ்வளவு புத்தகங்கள், எவ்வளவு பத்திரிகைகள், எவ்வளவு படிப்பு, எவ்வளவு அறிவு! எல்லாவற்றிற்கும் காரணமாக இருப்பது இந்த எழுத்து வித்தைதான்!

5. அருமையான கலை

இன்றைக்கு எத்தனையோ சொற்களைச் சொல்கிறோம். எண்ணிப் பார்க்காமல், முயற்சி இல்லாமல் சொல்கிறோம், ஆனால் அந்தச் சொற்கள் நம் காலத்தில் ஏற்பட்டவை அல்ல; எவ்வளவோ காலத்திற்கு முன் யாரோ வைத்த பெயர்களை நாம் கற்றுக் கொண்டு பேசுகிறோம். கிளைகளும், இலைகளும், காய்களும் உடைய ஒன்றைப் பார்த்து மரம் என்று சொல்கிறோம். அதற்கு அந்தப் பெயர் வைத்த காரணம் தெரியாமல் சொல்கிறோம். மரம் என்றவுடனே நம் மனத்தில் ஓர் உருவம் தோன்றுகிறது. அடிமரம், கிளை, இலை, பூ, காய், கனி எல்லாம் உடைய ஒன்று நம் மனத்தில் தோன்றுகிறது. இப்படியே 'நாய்' என்று சொல்கிறோம். ஒரு வகை உருவம் தெரிகிறது. இந்தப் பெயர்களைத்தான் நம்முடைய பாட்டன், முப்பாட்டன் எல்லோரும் சொன்னார்கள். அவ்வையார் முதலானவர்களும் இந்தச் சொற்களைத்தான் பேசிவந்தார்கள்.

வீட்டில் ஒரு பழைய குத்துவிளக்கு இருக்கிறது. அது யார் வாங்கியது என்று தாயைக் கேட்டால் பாட்டி வாங்கியது என்று சொல்வார். பாட்டியாரின் காலத்திலிருந்து வீட்டில் இருந்து வரும் குத்துவிளக்கு அது. அவ்வளவு பழைய குத்துவிளக்கு என்னும் காரணத்தாலேயே அதை அன்போடு வைத்துக் காப்பாற்றுகிறோம். நம்முடைய முன்

ஞோர்கள்காலத்துச் சொத்து என்றால் ஒருவகை அன்பு ஏற்படுகிறது. நூற்றுக் கணக்கான தலை முறைகளாக இருந்துவரும் சொற்களைப் பற்றி அவ்வாறு எண்ணுகிறோமா? இல்லை. மரம், இலை, பூ, காய், பழம் முதலான சொற்கள் பாட்டன் முப்பாட்டன் காலத்திற்கு முன்னே இருந்து, ஔவையார், திருவள்ளுவர் காலத்திற்கு முன்னே இருந்து, ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும் தமிழ்க் கிழவரும் பேசி வந்த பழைய சொற்கள். இப்படி நினைக்கும்போது தான் இந்தச் சொற்களின் மேல் நமக்கு ஒருவகை அன்பு வளர்கிறது.

இன்னொன்றும் எண்ணிப் பார்க்கவேண்டும். சில பெயர்கள் வைத்த காரணம் தெரியவில்லை. சில பெயர்களுக்குக் காரணம் தெரியும்பொழுது பழங்காலத்து மக்களின் அறிவு நமக்குத் தெரிவது போல் இருக்கிறது. நாய் என்ற பெயரைப் பற்றி ஆராய்வோம். நாய் எந்நேரமும் நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டே ஓடுகிறது. நாக்கு என்றாலும் நா என்றாலும் ஒன்றுதான். அதனால் அதற்கு நாய் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அப்படியே காட்டுப் பன்றிக்குக் கோரைப்பல் தெரிவதால் பல் தெரியும் மிருகம் என்ற எண்ணத்தோடு பன்றி (பல் உடையது) என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இப்படிச் சில பெயர்களுக்குக் காரணம் தெரியும் போது பழங்காலத்தில் மக்களின் மூளை எப்படி எப்படி வேலை செய்தது என்று ஒருவாறு விளங்கு கிறது. இவ்வளவும் இந்தச் சிறு சிறு சொற்களில் அடங்கியிருக்கிறது. நாற்காலி, முக்காலி, மண் வெட்டி முதலான பெயர்களிலும் இப்படி அறிவு

மறைந்திருக்கிறது. புகையிலை, புகைவண்டி, மிளகாய் முதலான சொற்களிலும் நாட்டின் வரலாறு மறைந்திருக்கிறது. எங்கிருந்தோ யாரோ சில இலைகளைக் கொண்டுவந்தார்கள். அதைச் சுருட்டிப் புகை பிடிப்பதைப் பார்த்தார்கள் அந்தக் காலத்துத் தமிழர்கள். அதனால் புகையிலை என்றார்கள். அப்படியே மாட்டுவண்டியிலும் குதிரை வண்டியிலும் புகை இல்லை. ஆனால் ரயில்வண்டியில் எஞ்ஜின் புகை விடுவதைப் பார்த்துப் புகைவண்டி என்று பெயர் வைத்தார்கள். மிளகு காரமானது; இந்த நாட்டில் மிளகுக் கொடியில் பழுக்கும் பழம் காரம் மிகுந்தது. யாரோ கொண்டு வந்த சில பச்சைக் காய்களிலும் அவ்வளவு காரம் இருந்ததைப் பார்த்தார்கள். அவற்றை மிளகாய் என்று சொன்னார்கள். இப்படியே நமக்குக் காரணம் தெரியாத சொற்களிலும் எவ்வளவோ அறிவும் வரலாறும் அடங்கியிருக்கின்றன. இப்படிப்பட்ட பல சொற்கள் சேர்ந்ததே மொழி என்றால், அதுவும் தலைமுறை தலைமுறையாய்ப் பரம்பரைச் சொத்துப் போல் வந்துகொண்டிருக்கிறது என்றால், மொழியின் பெருமையை என்ன என்று சொல்வது!

முதல் வகுப்பில் படித்தபோது ஒன்று இரண்டு என்று எண்களைக் கற்றுக்கொண்டோம். ஆயிரம், பத்தாயிரம், லட்சம், கோடி எல்லாம் கற்றோம். ஆனால் பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று எல்லாவற்றையும் பத்துப் பத்தாக எண்ணும் வழக்கம் எப்படி ஏற்பட்டிருக்கும் என்று எண்ணிப் பார்த்தோமா? நாம் மட்டும் அல்லாமல் ஏறக்குறைய எல்லா நாட்டு மக்களும் அப்படியே எண்ணு

கிறார்கள். அதற்கும் ஒருகாரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் தெரிந்தால் வியப்பாக இருக்கும். முதல் முதலில் ஒன்று இரண்டு கற்றுக்கொண்ட போது கைவிரல் விட்டுத்தானே கற்றுக்கொண் டோம்? ஒரு கையில் எத்தனை விரல்? ஐந்து. மற்றொரு கையில் ஐந்து. ஆகப் பத்து விரல். நாம் எப்படிப் பத்து விரலை எண்ணிப் பார்த்து, ஒன்று, இரண்டு மூன்று கற்றுக்கொண்டோமோ அப்படித்தான் பழங்காலத்து மக்களும் கைவிரல்களை எண்ணிக் கணக்குப் பழகினார்கள். எல்லா நாட்டு மக்களுக் கும் கைவிரல் பத்துத்தானே? அதனால் பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று பத்துப் பத்தாக எண்ணும் வழக்கம் எங்கும் காணப்படுகிறது. இன்னொன்றும் கருதிப் பார்க்க வேண்டும். ஐந்து என்று சொல்கிறோமே. அதில் உள்ள ஐ என்பதும் கை என்பதும் ஒன்றுதான். கிராமங்களில் ஒரு கை வேண்டும் என்றால் ஐந்து வேண்டும் என்று தான் பொருள். இந்தச் சிறு சொல்லில் எவ்வளவு காலத்து வரலாறு அடங்கியிருக்கிறது. இப்படியே ஒவ்வொன்றையும் ஆராய்ந்தால், மொழியைவிட உயர்வானது என்ன இருக்கிறது என்று தோன்றும்.

வானொலிப் பெட்டி ஒரு சின்ன கருவி. ஆனால் எவ்வளவு அற்புதமான கருவி! யார் யாரோ, எங்கெங் கிருந்தோ பேசுகிற பேச்சு, பாடுகிற பாட்டு அத்தனையும் அந்தப் பெட்டியிலிருந்து ஒலிக் கின்றன. என்ன வியப்பு! ஆனால் மனிதனுடைய மூளை இருக்கிறதே அதுதான் அந்த ரேடியோவை யும் கண்டுபிடித்தது. ஆகையால் மூளை அதை விடப் பெரிய கருவி ஆகும். மனிதனுடைய மூளையைவிடச்

சிறந்த கருவி எங்குமே இல்லை. அந்த மூளை பல பல தலைமுறைகளாக வளர்ந்த வளர்ச்சி எல்லாம் மொழியில் இருக்கிறது என்று சொல்லலாம். அப்படியானால், மொழி எப்படிப்பட்ட பரம்பரைச் செல்வம் என்று வியப்பு உண்டாகிறது.

ஒரு மனிதன் அழகான பெரிய வீடு கட்டுகிறான். பல பெரிய வீடுகளை அப்படியே பலர் கட்டுகிறார்கள். பல வீடுகளைப் பார்த்துவிட்ட பிறகு, நாம் அந்த வீடுகளின் பெருமையை மறந்துவிடுகிறோம். ஆனால் மிக மிகப் பழங்காலத்தில் குகைகளில் வாழ்ந்து கொண்டிருந்த மனிதன் ஒரு சின்ன குடிசை கட்டுவதற்கு எவ்வளவு பாடுபட்டிருப்பான் ? மண் சுவர் வைப்பதைக் கண்டுபிடிக்க எவ்வளவோ காலம் ஆகியிருக்கும். பிறகு அந்த மண்ணைச் செங்கல்லாக அறுத்து, வேக வைத்து, அதைக் கொண்டு சுவர் வைப்பதற்கு எவ்வளவோ காலம் கழிந்திருக்கும் ! இப்போது சிமெண்டு கண்டுபிடித்து, அதனால் சுவர் எழுப்புகிறோம். இப்படியே ஓலைபோட்ட குடிசையிலே இருந்து, மாடிவீடு வரையில் நாகரிகம் வளர்ந்திருக்கிறது. மொழியும் படிப்படியாக எத்தனையோ வளர்ச்சி பெற்று, இன்றைய நாகரிகமான நிலைக்கு வந்திருக்கிறது. குடிசை கட்டுவது அந்தப் பழங்காலத்தில் முதல் முதலில் ஒரு பெரிய வித்தையாக இருந்திருக்கும். இப்போதும், பத்து அடுக்கு உள்ள மாடிவீடு கட்டுவது பெரிய கலையாக இருக்கிறது. மொழியும் அப்படித்தான். மிகப் பழங்காலத்திலும், அது அருமையான கலையாக இருந்து வளர்ந்தது. இன்றைக்கும் மிக அருமையான கலையாக வளர்ந்து வருகிறது.

ஆனால் ஒன்று; நாம் வீடு கட்ட வேண்டுமானால் நினைத்தபடி நம் விருப்பம்போல் கட்டிக்கொள் ளலாம். இன்னொருவரைப் பற்றிக் கவலைப்படாமல் நம் வீட்டை நாம் கட்டிக்கொள்ளலாம். வீடு, தனித் தனியாக அவரவர் விருப்பம்போல் அமையும் கலை; தனிப்பட்டவரின் கலை. ஆனால், மொழி அப் படிப்பட்டது அல்ல; மொழி தனிப்பட்டவரின் கலை அல்ல; எல்லோரும் சேர்ந்து ஒரு மனமாய் வளர்க்கும் கலையே மொழி. அதனால் அதைச் சமூகக்கலை என்று சொல்ல வேண்டும். நாய்க்கு நான்கு கால்கள் இருப்பதைப் பார்த்து அதற்கு நாற்காலி என்று நாம் பெயர் வைக்க முடியுமா? நாம் நாயை நாற்காலி என்றால், மற்றவர்கள் ஒத் துக்கொள்வார்களா? மேசைக்கும், நான்கு கால்கள் இருப்பதால், அதையாவது நாற்காலி என்று சொன் னால் ஒத்துக்கொள்வார்களா? ஒருகாலும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் ஒரு பெயர் நிற்கும். இப் படி மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும், எல் லோரும் ஒத்துக்கொண்டால்தான் மொழியாகி வாழ முடியும். இதனால் மொழி என்பது எவ்வளவு பெரிய சமூகக் கலை என்பது தெரிகிறது. இன் றைக்கு அரசாங்கம் எல்லோருக்கும் உரிமை உள்ள குடியரசு என்றும் ஜனநாயகம் என்றும் சொல் கிறோம்? குடியரசு முறையில் மிகமிகப் பழங்காலம் முதல் ஏற்பட்டு வளரும் கலை மொழிதான்.

இந்தியாவில் ஒரு குடியரசு, அமெரிக்காவில் ஒரு குடியரசு, பிரான்சில் ஒரு குடியரசு என்று நாட்டுக்கு நாடு வேறு வேறு குடியரசு அமைப்புக்கள்

இருக்கின்றன. அப்படியே மொழியின் அமைப்பும் நாட்டுக்கு நாடு வேறு வேருக இருக்கிறது. ஒரு சின்ன வாக்கியம் எடுத்துக்கொள்வோம். எனக்கு உடம்பு நன்ருக இல்லை என்று சொல்வது தமிழ் வாக்கியம். ஆங்கிலத்தில் இதையே 'I am not doing well' 'நான் நன்ருக இல்லை' என்று சொல்ல வேண்டும். இப்படித் தமிழில் சொன்ஞல் அது யாருக்கும் விளங்காது. நம் காதுக்கும் அது தமிழாகத் தெரியவில்லை. இப்படி மொழிக்கு மொழி வேறுபாடு இருக்கிறது. ஆஞல் ஒன்றுமட்டும் மறக்கக் கூடாது. இந்தநாட்டுக்கு வந்து தமிழ் கற்றுக்கொண்ட வெளி நாட்டு அறிஞர் ஒவ்வொருவரும் தமிழைப் புகழ்ந்து விட்டுப் போயிருக்கிருர்கள். தமிழ் மிக அருமை யான மொழி, இனிமையான மொழி என்று புகழ்ந்து சொல்லியிருக்கிருர்கள். ஆகவே, மொழி ஓர் அருமை யான கலை என்றும், நம்முடைய தாய்மொழி நமக்குப் பரம்பரைச் சொத்தாக வந்திருக்கும் தனிச் சிறப்பு உடைய கலை என்றும் உணர வேண்டும்.